# ஆதி மார்க்க னீதி மொழி

**May 2024**

***இதழ் 34 – மே மாதம் 2024 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்சிகை முப்பத்து நான்காவது இதழாக, பத்து அவை மற்றும் ஒரு இசை வகுப்பு நிகழ்வுடனும் தொகுக்கப் பெற்று உங்கள் கைகளில் தவழ்கிறது. பலன் தரும் இம் மெய்ஞான பயிரை தொகுத்து வழங்கிய மக்களும், படித்து உணர்ந்த மக்களும், எல்லா மேன்மைகளும் பெற இறைவனின் ஆசீர்பாதத்தை வேண்டுகிறேன். வேத சாட்சியுடன் இதில் பொதிந்துள்ள யாவற்றையும் படிக்கும் மெய் உணர்வு பெற்ற மக்கள் அறிவில் ஏற்றம் பெறுவது நிச்சயம். 360 பாகைகளாக 12 ராசிகளில் சூரியனின் இரண்டு அயணங்களாக உள்ள வருடக் கணக்கும், 60 தமிழ் ஆண்டுகள் கொண்ட கால வட்டத்தின் இயக்கமும் அறிவை பெற்ற மக்கள் உணர்ந்து பழகுவதற்கென இறைவன் உண்டாக்கிய படைப்பாகும். குரோதி தமிழ் ஆண்டில் மலர்ந்து வரும் இம்மாத சஞ்சிகை அவரவருள் இருக்கும் தெய்வீக மெய்ப்புதையலை உணர வேண்டிய ஒன்றை அடிநாதமாகக் கொண்டே உதித்துள்ளது.

பிரம்மத்தை அறிந்த இராவணனை கொன்றதால் உண்டான பிரம்மஹத்தி தோஷம் நீங்க வேண்டி சுமார் 15,000 ஆண்டுகளுக்கு முன்பாக இராமேஸ்வரத்தில் ராமபிரான் தனது குரு வசிஷ்டரின் உத்தரவின்படி வணங்கிய நாதனே ராமநாதசுவாமி. அங்கிருக்கும் ஆதிசேஷனின் மறு அவதாரமாகிய பதஞ்சலி முனிவரின் ஜீவ சமாதி உணர்த்தும் இந்த இதிகாச கதையின் பொருளின் ரகசியத்தை தன்னை அறிந்த மக்களே அறிவர். இங்கு சீதாபிராட்டி, ஆஞ்சநேயர், விபீஷணர் ஆகியோர் உண்டாக்கிய லிங்கங்களும் மற்றும் உள்ள ஸ்படிகலிங்கமும் உணர்த்தும் பொருள் திருமூலர் பிரான் அருளிய தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம் என்பதேயாகும். இதன்படி தன் ஜீவனை அறிந்தவன் சர்வ தோஷங்களும் நீங்கி பிறவா நெறி பெறுவான் என்பதே இதன் அடி நாதம். கடல் சூழ்ந்த தீவாகிய ராமேஸ்வரத்தில், ராமபிரான் திருநாமம் தாங்கி கடலில் மிதந்த பாறைகளின் மீது ராமபிரான் ஏறி கடல் கடந்து போர் செய்து தன் மனைவியை மீட்டெடுத்ததின் தாத்பரியம் நெருப்பாறு மயிர் பாலம் கடந்து தன் சொந்த உடமைப் பொருளை மீட்டெடுக்கும் ரகசியம் என்பதனை மெய்யறிந்த மக்களே அறிவர். ராமபிரான் கடல் கடந்து வந்த இதிகாசக் கதை உணர்த்துவது பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார் என்பதுவேயாம்.

ராம அவதாரத்திற்கு காரணமாக ஆதி நாராயணனிடம் தசரத சக்கரவர்த்தி பிள்ளைப் பேறு வேண்டிய இடம் என்பதும், தர்ப்பை புல் மீது ராமபிரான் சயன கோலத்தில் இருந்த தலம் திருப்புல்லாணி என்பதும், இங்கு உள்ள பாலகிருஷ்ணனை வணங்கினால் பிள்ளை பேறு உண்டாகும் என்பதும் ஐதீகம். 108 திவ்ய தேசங்களில் ஒன்றான கிரேதா யுக காலத்தில் உண்டான இந்த ஆதி ஜெகன்நாதன் கோவிலில்,



Copyright © AMNA Trust, Chennai 

மரங்களில் நான் அரசமரம் என கிருஷ்ண பரமாத்மா அருளிய படி மிகப் பழமையான மிகவும் வியக்கத் தக்க அரச மரமானது ஆலமரம் போல் படர்ந்து விரிந்து இருப்பதை உடன் வந்த நூற்றுக் கணக்கான மக்களும் கண்டு வியந்தனர். தர்ப்பை புல் மீது இருந்து மந்திர ஆலோசனை செய்த ராமபிரானின் சாபத்திற்கு ஆளாகாமல் இருக்க ஆர்ப்பரிக்கும் வங்காள விரிகுடா கடலின் எதிரில் அமைதியாக இருக்கும் அரபிக் கடலே ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடல்.

ஆதி சிதம்பரமாக, தாய்க்கு உபதேசம் செய்த தலமாக விளங்குவது உத்தரகோசமங்கை. இக்கோவில், பல மன்னர்களும் ஜமீன்தார்களும் சுல்தான்களும் சேர்ந்து முகலாயர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் நெருங்க முடியாத இடத்தில் கட்டியதாகும். மனிதனை காக்க இயலாத இங்குள்ள மரகத நடராஜர் சிலை ஒலி அதிர்வுகளால் சிதைவுறாமல் மனிதனால் சந்தன காப்பு பூசி காக்கப் பெறுகிறது. மரகத சிலை உணர்த்துவது பச்சை நிறமாகிய மகேஸ்வர தத்துவத்தின் சிதம்பர நடனமாகும். இக்கோவிலின் 3,000 ஆண்டுகள் பழமையான தல விருட்சமாகிய இலந்தை மரத்தின் அடியில்தான், ஏழு யுகப் பிரளயம் கண்ட காகபுசுண்டர் பிரான் இருந்து தவம் செய்த இடமாக கருதப் பெறுகிறது.

அகத்திலுள்ள அசலான பிரம்மாண்டம் அறிவதற்கென உண்டாக்கப் பெற்றதே புறத்திலுள்ள நகலான இத்தனை பிரம்மாண்ட கோவில்களும். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆலயம் புகுதல் அழிவிலா வாழ்வு, ஆலயம் தொழுதல் சாலவும் நன்று என்பது, ஏன்? எங்கே? எதற்கு? எப்படி? என்ற கேள்வி தோன்றும் எதார்த்த உள்ளம் கொண்ட மக்களுக்கு அதற்கான பதிலை தருவதற்கு இறைவன் ஒருவரை நிச்சயம் அனுப்புவான் என்பது சத்தியம்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஆசீர்பாதத்தால் இயங்கிக் கொண்டிருக்கும் ஆதி மார்க்க நீதி அவையின் செயல் இன்னதென மெய்ஞானத் தேட்டம் உள்ள நன்மக்கள் விளங்கி உணர்ந்து இதில் ஆகிக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் வழிமேல் விழி வைத்து காத்திருக்கிறது ஆதி மார்க்க னீதி அவை.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை



Copyright © AMNA Trust, Chennai May 2024

*உலக காரியத்திற்கு னம்முடைய சபை இல்லை. ஆத்மார்த்தீகமாகிய உள்ளமைத் தெய்வீக வளர்ச்சிக்கே இது இருக்கிறது. இது அரசனிடமும் தேவையற்ற சபை. அழியாத ஐஸ்வரியமுடைய அந்த ஏகனிடமே தன் தேவையை எதிர்பார்த்து னிற்கிற சபை.*

*உலகத்தில் ஒருவன் வைரம், வைடூரியம் வாங்கி விற்கிறான். மற்றொருவன் கருவாடு வாங்கி விற்கிறான். பேரளவில் இரண்டு பேரும் வியாபாரிகளே. ஆனால் செயலளவில் அவர்களுடைய குணம், வரவுசெலவு முதலிய யாவும் வெவ்வேறாயிருக்கும். கருவாடு வியாபாரியிடமே புழங்கி இருக்கிறவர்கள் வைர வியாபாரியிடம் வந்து, அந்த னாற்றத்தைக் காணோம் என்று குறை கூறுகிறார்கள். காலமெல்லாம் பொய்யிலேயே புழங்கியவர்கள் எம்மிடம் வந்தும் இந்த உலக அழிசெயல் வரவையே எதிர்பார்க்கிறார்கள்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 ஏப்ரல் மாத அவை நிகழ்வுகள் – 2024 மே மாத வெளியீடு

### 04-04-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
### தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **தேகம்னம் போலுள்ள எம்குருனாதருக்கு னாமமெதும் செப்புதற்கொப் பனையுளதோ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
மனிதனின் சுத்தத்துறை இருதயமே இறைவன் இருக்கும் கைலாயம். அறியாமையுள் இருக்கும் திருச்சிற்றம்பலப் பொருளாகிய அறிவையும், பிரணவ வீட்டையும் அல்லாஹ்வின் கயிறால் கட்டப்பட்ட வேத வாயிலாகவே அறிய முடியும். தேடவும், தட்டவும், கேட்கவும் வைக்கும் அவரவரின் னாமத்துக்குரிய பொருளை அறிவதுவே தன்னையறிதல்.

*ஜீவசகோதரர் சங்கர்:* உருவும் பெயரும் செய்கையும் வெவ்வேறு புனைந்து வையங்காக்க மானிட சட்டை தாங்கி வரும் ஒரு மெய்க் குருபிரானை புறத்தோற்றத்தால் அடையாளம் காண இயலாது. குருவருளால் ஐவழி விளைவுக்கு அப்பாலாகிய மெய்வழி எனும் மேடு கண்டவர்க்கே நித்திய ஆனந்தம் வாய்க்கிறது.

**குருபிரான் அருளமுதம்: திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் 03-ன் தொடர்ச்சி:** இறைவனின் சன்னதம் பெற்ற பாரவான்களின் அருளே எமனச்சத்தை விலகச் செய்யும். ஐம்புல நுகர்வின் மூலமாக அசுத்தமாகிய மனமெனும் வயிறை சீர் செய்வதே ஆசான் அருளும் உபதேசம். அதை சார்ந்து வாழும் மக்களே தேவராகும் தகுதியைப் பெறுகின்றனர். நரனின் அறியாமை அகற்றி அறிவுருவாக்கும் ஆசானின் செயலே சங்காரம். வித்தில்லா வித்தாக விளங்கும் யுகாந்த நாட்டுச் செல்வமே தௌஹீது.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **திருக்குரான் அல்கியாமா – வசனம் 02 : லவ்வாமா** அல்லாவின் சத்தியவாக்கே நம் கவனத்தை மேன்மை பெறச்செய்கிறது. **புறம், பொய், குபாடம், கோள், மனமுரண்டு, கெடுக்கும் மேலெண்ணம் ஆகியவை லவ்வாமாவின் குணங்களாகும்.** வாழ்னாள் என்பது அல்லா மனிதனுக்கு அருளிய பொக்கிஷமாகும். குருவின் சொல் கேட்டு நடக்க, குணங்கள் யாவும் நன்மையாக மாறும்.

*ஜீவசகோதரர் அஜய்மகேஷ்:* பிறப்புக்கு காரணமாகிய வினையின் தலைவன் மனம். மெய்க் குருபிரான் நம் மனதின் செயலை அறிவாக மாற்றி பிறப்பென்னும் பேதமை நீக்கி வினை தீர்த்து செம்பொருளாகிய ஜீவனை காணச் செய்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**
அகரப் பொருளை கைப்பற்றியும், பற்றிக் கொண்டும், பற்றவும் இருக்கிற மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

**செப்பிய பொருள னைத்தும்**
**செகந்நனி லெங்ஙே கண்டு**
**எப்படி யடைவோ மென்று**
**ஏங்ஙினீ மயங்ஙி டாமல்**
**துப்புர வாக உன்னுள்**
**துலக்குமா சானைப் போற்றி**
**இப்புவி தனிலெல் லோரும்**
**இனிதுடன் அறிந்து வாழ்வீர்.** **(ஐம்மணிப் பொதிகை)**

என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 07-04-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

**குருபிரான் அருளமுதம்:**

ஒரு மெய் ஆசானின் கருணையே நம்மை சிவமாக்கி அவ்வான னாட்டில் குடியேற்றி வைக்கும். **மூர்த்தி தலம் தீர்த்தம்** என்பது ஆசானின் அருள் னா விலிருந்து வரும் அமுதமாகும். அதுவே நாம் ஒழுக்க நெறி சார்ந்து வாழ்வதற்கான வழி வகுக்கும். மெய்க்கல்வியைப் பழக்கித் தருபவரே மெய்யான குரு. அவரவரின் நாமமாக விளங்கும் ஜீவனே அடி-முடி-நடுவாக அகரப் பொருளாக, எழுதாத எழுத்தாக விளங்குகிறது. மெய்க் குருபிரானின் ஓசை கொண்ட நடனமே மனுவை ஈசன் ஆக்குகிறது. அறிவிருக்கும் தலம் அறிந்து வாழ்வதே ஆத்ம திருப்தி தரும் வாழ்வாகும்.

**நினைந்து நினைந்து ணர்ந்து ணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந் தன்பே**
**நிறைந்து னிறைந் தூற்றெழும்கண் ணீரதனால் உடம்பு**
**நனைந்து நனைந் தருளமுதே நன்னிதியே ஞான**
**நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று**
**வனைந்து வனைந் தேத்துதும் நாம் வம்மின் உலகியலீர்**
**மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்**
**புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன்**
**பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே** **(திருஅருட்பா)**

என வள்ளல் பெருமானும் அருளியுள்ளார். பொய்யின்ப சிற்றின்ப நுகர்ச்சி விட்டு, மெய்யுணர்வு பெற வழியருளும் வந்த வேதமே ஆசான்.

*ஜீவசகோதரர் கௌதம்:* நமது சொந்த தேகத்தை புனற்றுறைக் கோயிலாக இதயாசனத்தில் போய் சந்திக்கச் செய்யும் பிரம்மவித்தை அருளும் ஆசானின் இரக்கமே நம்மை நித்திய தேகத்தில் குடியேறச் செய்கிறது. வைரமணித் தேகமாக ஆதியாகவும், அனாதியாகவும் விளங்கும் அக் கைலாய நாட்டிற்கு போக்குவரத்தாக இருப்பவர்களே கைலாய பிராப்திக்குரிய கைலாய பரம்பரையினர் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

*மேலானவற்றிற்கெல்லாம் மேலானதும், னித்தியகாலமும் ஆனந்நத்தை யுண்டுபண்ணுவதும், இதயாகாச னடுவிலிருப்பதும், சுத்த ஸ்படிகத்தைப் போன்றதுமான குருவைத் தியானிக்கிறேன்.* ***~ குரு கீதை***

## 07-04-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்ஙமதிடத்தில் ஐம்புல கதவை அடைக்கும் பேரறிவு...** எனும் குருமணி மாலை ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே மலர்ந்தன.

*ஜீவசகோதரி தேவிபிரியா:* கடத்துள் இருக்கும் கடவுளின் இருப்பிடமாகிய கண்டத்துள் பார்த்து சொல்லும் மூலமந்திரமே பலன் தரும் என்பதை, நவக்கிரக பிடியிலிருந்து நம்மை மீட்கும் கிரகஸ்தரின் அருளால்தான் அறிய முடியும்.

*ஜீவசகோதரி சாந்தினி:* நித்திய சூட்சுமமாம் பிரம்மத்தை முப்பொருள் கோலமாய் அருள்பவரே மெய்குருபிரான். அவரின் பேரிரக்கம் கொண்டே வேர்மேலும் தலை கீழுமான



Copyright © AMNA Trust, Chennai 

சிவமயப் பொருளை அறிந்து சிவானுபவம் பெற முடியும். அலையும் நம் மனதை அலைவற்ற சிவ நிலைக்கு மாற்றி வைக்கும் குருவும் சிவனும் ஒன்றே.

*ஜீவசகோதரி நாகமணி:* வஞ்சப் புலனின் சதி, மறலி செய்யும் வாதனை இதற்கு அஞ்சுவதே அறிவு. குருவருளே சாமுன் சாகப்பழகி, மரண பயமற்று வாழச் செய்யும். ஆசான் அருளால் அறியும் ஆறாம் அறிவே நெருப்பாறு மயிர்ப்பாலம் கடத்தும். அண்ட பகிரண்டம் இருக்கும் தொண்டர் இதய மனக்கண்ணாடியை காட்டி உணர்த்துபவரே ஆசான்.

*ஜீவசகோதரி பூர்ணிமா:* நித்தியத்தைக் காண்பதே தரிசனை. திருநாவுக்கரசர் அருளிய திரு அங்கமாலை பாடலின் படி, தலையான தலை அறியும் நித்திய கண் காட்சியே தரிசனையாக, காதே வித்தில்லா வித்தின் விதைப்பிடமாக, மூக்கே முச்சுடரின் ரகசியமாக, வாயே வாய்மையின் இருப்பிடமாக, கையே உள்ளமாக, காலே கதியாக, இருந்ததை இருந்தபடி இருந்து காட்டி சொல்லாமல் சொல்லி செயலாக்கி வைப்பவரே நாவரையர்.

*ஜீவசகோதரி மலைபுஷ்பம்:* புறத்தைக் காட்டும், அவரவரின் மனக் கண்ணாடியைக் காட்டும், தெய்வக் கண்ணாடியே ஆசான். உடல் பொருள் ஆவி இன்னதென உணர்த்தும் உத்தமரின் தாளே தனக்கு உவமை இலாதான் தாள்.

*ஜீவசகோதரி திவ்யபிரியா:* சித்தர் முத்தர் அருளிய பரிபாஷை ரகசியம், தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவனாக இருப்பது, ஜீவகாருண்யம், செய்நன்றி என்பன யாவும் கழுத்திற்கு மேல் உள்ள ஞானம் என ஒரு மெய்க்குருவின் துணை கொண்டே அறிய முடியும்.

*ஜீவசகோதரர் சபரீஷ்:* ஒரு மெய்ஞானியின் துணை கொண்டே கடவுளை அறியும் அறிவை அறிய முடியும். ஆறாவது அறிவுடன் விளங்கும் மனதை ஆசான் அருளால் அறிந்து அதனை ஓரறிவாக ஆக்குவதே செயலாகும்.

**குருபிரான் அருளமுதம்:**
வேத வேதாந்தங்கள் யாவும் அறிவில் தெளிவு உண்டாக்கவே வந்தன. முத்திப் பேருரை வழங்கிய அங்கங்கள் எழுவரின் சப்தங்களும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்தால் அறிவுத் தெளிவு பெற்று சப்த ஸ்வரங்களாக ஒலித்தன என குருபிரான் அருளியதும் சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 07-04-2024 ~ ஞாயிற்றுக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வாஞ்ஞாலிப் பழம்புலமை மன்னரொரு புடைசூழ்ந்து...** என்ற ஆடலங்ஙன்னி பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
வேதப் பதிக்குள் நம்மை குடியேற்றி வைக்கும் குருபிரானின் ஒலிப் பிரவாக ஆடலமே வேதம். அவ் வேத நாயகன் தன் இரக்கத்தால் வெளியாக்கும் கஜானாப் பொருளாகிய வேதமே, பாதமாக, திருவடியாக, புத்தேளாக, அமானிதம் எனும் அறிவு மாணிக்கச் சீதனமாக மனுவுக்குள் பொதிந்துள்ள இரகசியத்தை அறிய வைக்கிறது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் 171:** புண்ணியத்தின் உருவாக ஆசான் வருவது போல், பாவத்தின் உருவாக பழியாகிய எமன் வருகிறான். எவரொருவர் ஆசானிடத்தில் பத்தினித் தனத்துடன் வாழ்கிறார்களோ, அவர்களின் பாவங்கள் அனைத்தும் நீங்கி, எமவாதை கடந்து நித்திய உயிர் உடலைப் பெறுகின்றனர்.

*ஜீவசகோதரர் கணேஸ்வரன்:* ஒரு மெய்க் குருபிரான் அருளும் ஞான மொழியதனை உள்ளதை உள்ளபடி ஏற்கும் எதார்த்தப் பண்பே, உடல் கண்டு உயிர் வழி பற்றி ஆத்ம வீடடையச் செய்யும்.



Copyright © AMNA Trust, Chennai May 2024

*ஜீவசகோதரர் பிரபு:* மாயை எனும் இருளில் சிக்கி நித்தம் காயப்பட்டு களைத்துக் கொண்டிருக்கும் நம்மை மீட்கவே, தூய ஞானசுடர் விளக்காகிய ஆசான் வருகிறார்கள். அவர்களின் வித்தில்லா வித்தாகிய நாதமே நம்மை அழியா நாட்டில் குடியேற்றி வைக்கிறது.
*ஜீவசகோதரர் கோபாலகிருஷ்ணன்:* தூலப் பிணி நீக்கும் மருந்து போல், ஜீவப்பிணி தீர்க்கும் அழியாத அருமருந்தே ஆசானின் திருக்கரத்தில் இருக்கும் நாத மருந்து. **இம்** மருந்தை உண்டவர்களே பிறவிப்பிணி நீங்கி பிறவா னெறி பெறுகின்றனர்.

*ஜீவசகோதரர் தண்டபாணி:* அக வழிபாடு உணர்த்தும் அரும்பெரும் நிலைகளே வள்ளல்பிரான் அருளிய சன்மார்க்கம், ஜீவகாருண்யம், மகர ஜோதி என்பதாகும். ஆறாவது அறிவின் செயலும் பலனும் இன்னதென ஒரு மெய்க் குருபிரானின் இரக்கத்தால் பெறும் போதே தெளிவான வாழ்க்கை வாழ இயலும்.

**குருபிரான் அருளமுதம் - பிள்ளைத்தமிழ் :**
தூங்காமல் தூங்கி சுகம் பெறும் தவநிலை இரகசியத்தை, பதினாறு வரிகள் கொண்ட பத்து பாடல்களாக சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள அமுத மொழியே பிள்ளைத் தமிழ். இதன் காப்பு செய்யுளில் ஆறு நிலைகளாக உள்ள பாத ரகசியத்தை ஆசானின் அருளமுதமாகிய நந்தி எனும் தீயின் மூலமே அறிய முடியும். எழுதாத எழுத்து, ஊமை எழுத்து, மோன எழுத்து, கூறாத அட்சரம், ஏகாட்சரம் என விளங்கும் வேதத்தை உணர்த்துவது குருபிரானின் பெருங்கருணை பேரிரக்கமே. அதுவே நாயகன் தாளாகிய திருவடியை, ஓதாமல் ஓதும் செயலின் மூலம் நித்தம் தொழச்செய்து, நன்மை எனும் திரு மூலமணிப்பதியில் நம்மை கொண்டு சேர்க்கிறது என்ற குருபிரானின் அருளமுதுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 11-04-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

மெய்வழி ஆண்டவர்கள் அருளிய **என்னமோ வென்று வும்மை யெண்ணிவிட் டிருந்நே னின்னாள்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் 3ன் தொடர்ச்சி :** *ஈத்-முபாரக் எனும் ரம்ஜான்* புண்ணிய நாளாகும். **என்ன செய்தனையோ யான் உனைச் சேர இன்னும் அறியேன் இறைவா இறைவா** என வித்தில்லா வித்தினை, பரிசுத்த ஆவியின் அருளால் தேடி வந்த நன்மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.



**பிள்ளைத் தமிழ் :** மாவுல் ஹயாத்து, காருண்ய கறுப்பு, அஜபா, ஜீவன், தவநிலை ரகசியங்கள், பாத நிலைகள், சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல், சூக்குமம், காரணம், மகா காரணம் இவற்றின் சிறப்புகளை உணர்த்தும் இப்பாடலின் பொருளை அறிவை அறிந்தோரே அறிவர். *பகாபதமாகிய* சமஸ்கிருத வார்த்தைகள் *பகுபதமாவது* தமிழில்தான். தமிழின் துணை கொண்டே பத்து வயதான கன்னி அருளும், அமுதத்தை அருந்த முடி யும். **முன்னே துவர்க்கும் பின்னே இனிக்கும் கோடு, கொண்டை, கவை, கொக்கி, கலப்பை, காண்டீபம், கிள்னாமம்** என சாலை ஆண்டவர்கள் அருளிய பாஷை உணர்த்தும் அமானிதம் மற்றும் சோடசத்தின் ரகசியம் பொதிந்த பிள்ளைத் தமிழ் அறிந்தவனே முழுமுதல் ஞானி. தமிழே உயிரின் மேலாம்



Copyright © AMNA Trust, Chennai May 2024

ஒழுக்கமாக உலகில் உள்ள யாவர்க்கும் வேண்டிய ஒன்றாக உள்ளது. குரு அருள்கின்ற ஆசனமிட்டு தாரகா மந்திரத்தை ஓத, வரும் நாளெல்லாம் நல நாளே.

**பிள்ளைத்தமிழ் நூல் சிறப்பு:** அருவுருவாய் அனைவரையும் ஆளும் விண்ணின் பாதமே ஜென்ம சாபல்யம் அருள்கிறது. நன்மை எனும் திரு மூலமணிப்பதி நந்தியாக, புகையாத கனலாக, சுடாத தீயாக உள்ளது. குரு அருளும் தேனருவிப் பதியில் நீராடி, பூரணனாகி, அமுத தாரையினை உண்டு, அஷ்டாங்க நிலை கடந்து, சந்திர புஷ்கரணி குடியேறி, ஓதாமல் ஓதி, **இல்லறம், கிரகஸ்தன், சன்யாசி, பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், துறவறம், அறம், சமத்துவம்** எனும் எட்டு நிலைகளும் கைவரவாகும் நிலையே மும்மூலம் தீர்ந்த நிக்கிரக நிலையாகும். வான வேதாந்த சஞ்ஞீவியே எமனச்சம் தீர்த்து பிறவாமை அருள்கிறது. பஞ்ஞகோசம், பஞ்ஞபீஜப் பொருள், பஞ்ஞாட்சரம் இவற்றை சிவசக்கரமாகிய குருவருளால் அறிந்து, பசு பாசம் நீங்கி இக்கடம் விட்டு அக்கடத்துள் இருக்கும் பதியுடன் சேர்வதே மனதற்ற பரிசுத்தம். குருவின் தயவுடன் அனுபவத்தால் அறிய வேண்டிய பாடலே பிள்ளைத்தமிழ் என குருபிரான் அருளியதும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

## 18-04-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **விடிந்நன னல்ல னாளும்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

கால நிலைகளை உள்ளடக்கிய காலன், நம்மைக் கண்டு அஞ்சும் நாளே நல்ல நாள். அச்சமிலா மெய்வழி நாட்டிற்கு போக்குவரத்தாய் இருக்கும் ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் அவரவரின் சொந்த வேத வீட்டில் நுழைந்து பாதுகாப்பாக வாழ்கின்றனர்.

**திருமெய்ஞ்ஞான கொரல் - வாக்கியம் எண் 03-ன் தொடர்ச்சி:** மின்னலை விட வேகமாக செல்லும் குதிரை மீது ஜகத்குரு சவாரி செய்வது என்பது அகமியத்தில் கோடிசூர்ய பிரகாச தூலத்தில் சவாரி செய்து நினைவெனும் ஆகாயத்தில் சொர்க்க லோகம் கட்டும் செயலாகும்.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **அல்குரான் -** வந்த வேதமாகிய ஆசான் அருளால் மனதின் தீமையறுத்து தூய்மை அடையாதவர் எரி நரகின் விறகுகளே. குருவருளால் ஆதி னூரானியைத் தன்னில் அறிந்த மக்களுடன் பூவனத்தின் பூஞ்சோலையாக உயரிய சொர்க்கத்தின் நறுமணம் கமழும் நன்னிலமாக திகழ்வதே ஆதி மார்க்க நீதி அவை.

**குருபிரான் அருளமுதம்:**

சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள அலிபு-லாம்-மீம் கடந்து அப்பால் விளங்கும் தௌஹீது மக்காமின் சிறப்பு திருக்குர்ஆன் வேதத்தில் சாட்சியாக அருளப் பெற்றுள்ளது. அலையும் மனதின் அடிமையாய் இருக்கும் பேரறிவை மீட்கும் செயலே சாமுன் சாகப்பழகும் பிரம்மவித்தை. செத்த இடம், பெற்ற இடம், இனி சாகாது இருக்கும் இடத்தை அவரவரிடம் உணர்த்தும் முரீதின் நிலை அருளி மூமின் ஆக்கி வைக்கும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

**பிள்ளைத்தமிழ் :** மனதற்ற பரிசுத்தத்தில் நம்மை ஆக்கும் பிரம்மவித்தை அருளும் வரத குருபிரானிடம் தஞ்சம் புகுந்தோரே பேரின்பம் அனுபவிக்கும் பேரு பெற்றவர். குருபிரான் அருளிய செயலில் கடினமனம் வைராக்கியமுடன் சாதிப்பதே ஒழுக்கம். தலையான தலையறிந்த சற்குருபிரானே, **தாலோ தாலேலோ** என தூங்காமல் தூங்கும் வித்தையை போதிக்க வல்லவர். ஆர்ந்த சூக்குமமும் அஜபா நடனமும் தன்னில் அறிந்து எமனச்சமற்ற வாழ்வு வாழவே, **வா வா மகனே...** என அழைக்கிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai May 2024

ஆதி மெய் உதய பூரண வேதாந்தப் பாடல்கள் யாவும் சுவாசத்தின் அட்சர இரகசியமாக உள்ளதை அறியாமல் படிப்பது வீண்படிப்பு என்பதையே **னடையெனும் உஜூதைக் காண லகுவல்ல தன்னாலாகா...** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள் என்ற குருபிரானின் அருளமுதுடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 20-04-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்ம பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வரமாகிய மானிதமது வாங்கிய...** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** இறைவனிடத்தில் நாம் வாங்கி வந்த அமானிதம் எனும் வித்யாதத்துவக் கடனே ஆறாவது அறிவு. அதனை அறிந்து அடைவதற்கே அரிய பிறப்பாகிய இம்மானிட ஜென்மம் தரப்பெற்றுள்ளது என்பதை அறிவு வடிவாக வரும் ஆசானின் அருட்கருணையின் மூலமே அறிய முடியும்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் - 172:** சர்வ வியாபியாக, பராபரமாக, அணுக்கோடியிலும் நிறைந்திருக்கும் ஆதியனாக நின்றிலங்கும் இறைவனின் இரகசியம் ஒவ்வொரு மனிதனின் பிராணனுக்குள் வைத்து பூட்டி வைக்கப்பட்டுள்ளது என்பதை ஜீவனின் கனத்தை பூமியின் கனத்தோடு ஒப்பிட்டு சாலை ஆண்டவர்கள் இத் திருவாக்கியம் மூலம் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - யோவான் சுவிசேஷம் – அதிகாரம் : 15 – திருவசனம் – 26 & 27 :** கர்த்தராக வரும் குருபெருமான் இரக்கம் கொண்டு நம் ஜீவனின் இரகசியத்தை உணர்த்த அருளும் ஒவ்வொரு வார்த்தையும் சுவிசேஷ நற்செய்திகளே. இறைவனின் சன்னத முத்திரைகளுடன் வரும் பெரியோர்களின் திருமுகத்தின் முன் நிற்பவர்களுக்கே, நீதி தீர்ப்பு நடைபெறும் மகஜர் மைதானம் அவரவர் அகத்துள் பொதிந்திருக்கும் இரகசியம் என்பதனை அறியமுடியும்.

**குருபிரான் அருளமுதம் - பிள்ளைத் தமிழ் :**
சற்குருவான தனிக் கருணாகரரின் தேனருவிப் பதியாம் உபதேசத்தை செவி மடுத்து, மெய் வணக்கத்தில் தூங்காமல் தூங்கி நிலைப்பவரின் வினைகள் யாவும் அறுபடுகின்றன. அவர்கள் காலன் அணுக முடியாத வன்மை எனும் சுழிமுனையில் இரண்டற கலந்து, அமுதம் சிந்தும் பிள்ளைத் தமிழின் யோக சாதன நிலைகளை உணர்ந்து, நித்திய பேரின்ப பெருவாழ்வில் குடியேறும் பெரும் பாக்கியத்தை பெற்றார்கள், பெறுகிறார்கள், இனியும் பெறுவார்கள் என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*அங்குஷ்டமாத்திரமும், சின்மயமுமாகிய புருஷனை இதயத்தில் தியானிக்கின் அங்கு எந்தத் தன்மை விளங்கி உள்ளம் பூரிக்கின்றதோ அதனை உனக்குச் சொல்லுகின்றேன்; கேட்பாயாக.*
***~ குரு கீதை***


Copyright © AMNA Trust, Chennai May 2024

## 25-04-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

மெய்வழி ஆண்டவர்கள் அருளிய **தரைதனில் னரராய்த் தோன்றித் தாம்கெதி அடையாதோரை...** எனும் தெய்வத் தேடு கூடகம் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
சித்து எனும் அறிவுக்கான மாதமே சித்திரை. அறிவை அறிய மறைபடாத் தேவர்கள் உண்டாக்கிய நகல் சடங்குகளே கோயில்களின் தேரோட்டம், கும்பாபிஷேகம், திருவிழாக்கள் யாவும். அவரவர் பெயர் உணர்த்தும் பொருளை அறிவதே தன்னை அறிதலாகும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் 3ன் தொடர்ச்சி: பேச்சு மூச்சற்றவிடம் சொல்லலாமோ பெலத்துனின்ற குருவருளைப் பேசப்போமோ...** பிறக்கும் நேரத்தில் பேச்சு மூச்சற்று பிறந்த குழந்தை சவம் என்பதால் பிரசவம் என்ற பெயரானது என்பது சாலை ஆண்டவர்களின் திருவாக்கு. மூச்சு லயமாகிய மனோ லயத்தை முச்சந்தி தனிற் சந்நித்து உறையும் வாழ்வாகிய சமாதி நிலை எனும் பிரம்மவித்தை செயலே சாலை ஆண்டவர்கள் அருளிய மெய்வழி ஞானம்.

**பிள்ளைத்தமிழ்:** ஆளுடைபிள்ளை என்ற தக்ஷிணாமூர்த்தியின் நாமமே கால காலமாக பிள்ளை எனும் நாமமாக உள்ளது. பெரியோர்கள் அருளியுள்ள பாடல்களின் பரிபாஷை யாவும், ஆசான் அருளால் ஆறாம் அறிவை அறியும் போது புரியும். தன்னை அறியும் ரகசிய துறைப் பெருங்கடலே ஆத்ம மர்ம ஜலக்கடல். ஆத்மாவின் இறுதி நிலையே மனம். அறிவு இருக்கும் தலமாகிய சந்திர புஷ்கரணி, பானமுதம் என்பதை அஷ்டாங்க யோகம் மூலமே அறிய முடியும். ஆசான் அருளால் ஜீவனை அறியும் மறுபிறப்பு நிலையே செத்தார் எழுவார் என்பதாகும். சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பாதமாக இருக்கும் பரமாத்ம நிலையை, ஜீவாத்மா அறிந்து பழகும் செயலே பேரின்பம். மும்மூலம் தீர்க்கும் ஜென்ம சாபல்ய செயலே ஆதி மார்க்க னீதி அவையின் அடிநாதம். குரு பரம்பரையாக வரும் அறிவாகார தேவ புருஷனின் அருளால்தான் தூங்காமல் தூங்கி மௌன மாமணி மாடத்துள் குடியேற முடியும். **ஆ இ ஓ** என்றே இட வலம் வரும் கால சங்கார ரகசியமே முரீது. வாசி எனும் குதிரையேறி வழி சரியாய் சென்ற வள்ளலிடம் சேர்ந்தால் ஓதாமல் ஓதும் செயல் கைவரவாகும் என குருபிரான் அருளியதும், பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 27-04-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்


அறிவு வடிவாம் பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **சிரந்நனியே உடல்வேறு பிரித்துப் பார்த்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
ஒரு தலைமுறை காலம் நம் உள்ளிருந்து நம்மை காக்கும் சாகாத்தலையே சிரமாகும். சிரந்தனியே உடல்வேறு பிரித்துப் பார்க்கும் அறிவிருக்கும் தலத்தில் குடியேற்றி, நம் ஆவி வீணாகாமல் காத்து ஜீவன் கண்ட ஜென்ம சாபல்யச் செயல் போதிப்பவரே மெய்க் குருபிரான்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் 173:** னித்திய வாழ்வான அறிவின் வழியே னீதியாகவும், அனித்திய வாழ்வான மன வழியே அனீதியாகவும் உள்ளது. மனம் பூரிக்கும் பாவச் சுமையே பிறவிச் சுழலின் காரணம். முத்தியடையும் நினைவை சுத்தமாக்கி, வாழும் காலத்தில் உள்ளச்சமுடன் நினைவை சுத்தமாக்கி வினை அறுக்கும் ஜென்ம சாபல்யச் செயல் செய்பவனே பேரின்ப நிலை அனுபவிக்கிறான்.



Copyright © AMNA Trust, Chennai 



*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம் – அப்போஸ்தலர் 15:9,15 :** *விசுவாசத்தால் அவர்கள் இருதயங்களை கர்த்தர் சுத்தமாக்கி, அவரின் நாமந் தரிக்கப்படும் சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடும்படிக்கு*
**ரோமன் - 11:7, 8:** *தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அதை அடைந்தும், மற்றவர்கள் இன்று வரை கடினப்பட்டும் உள்ளனர், கன நித்திரையின் ஆவியும், காணாத கண்களையும், கேளாத காதுகளையும் தேவன் அவர்களுக்கு கொடுத்தார்.*
மெய்குருவின் விஸ்வ நாதத்தால் ஜீவசுவாசம் ஊதப்பெற்று, மூன்றாவது கண் திறக்கப்பெற்று விசுவாசமெனும் வெற்றி தரும் மந்திரப் பொருளில் குடியேறி வாழ்வதே பாக்கியம். தேவசன்னத முத்திரையுடன் வரும் கர்த்தராகிய குருபிரானைத் தேடி அடையாத யாவரும் கண்ணிருந்தும் குருடாய், காதிருந்தும் செவிடாய், அறியாமை எனும் கன நித்திரையின் பிடியில் சிக்கிய கல்மனதுடன் உள்ளனர்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் - அத்தியாயம் - 16 (அந்நஹ்ல்)** பிணி-மூப்பு-சாக்காடு கொண்ட துக்கஉடல் இம்மைக்கான வாழ்வாகவும், அதுவல்லாத பேரின்ப தேகம் மறுமைக்கான மோட்ச வாழ்வாகவும் உள்ளது. மோட்சவீட்டில் தூலம் உள்ள போதே மெய்குருவின் துணையால் குடியேறி வாழ்வதே, மக்காவிலிருந்து மதினாவிற்கு குடியேறி வாழும் ஹிஜ்ரத் ஆகும். படைத்தான் படைப்பு அனைத்தும் மனுவுக்காக, மனுவைப் படைத்தது தன்னை வணங்க என்பதே வேதமுடிவாகும்.

**குருபிரான் அருளமுதம்:** சத்தியவேதம், திருக்குரான், கோடாயிதக்கூர் திருவாக்கியங்கள் பிறந்த ஊர், பாஷை வேறு என்றாலும் சத்தியச் செயல் ஒன்றே. அறுசுவையை அனுபவித்து அறியும் கர்த்தாவாக அவரவருள் ஆறாவது அறிவாக வீற்றிருக்கும், படைத்த பரம் பொருளை அறியும் ஆற்றலே இறைவன் மனிதனுக்கு வழங்கிய தனிச்சீதனம்.

**பிள்ளைத்தமிழ் :** வாசி என்பது மின்னல் வெட்டி மறைவது போல் செல்லும் குதிரையாக உள்ளது. வாசியை தன்வசமாக்கிய அறிவு வடிவாம், மார்க்க நாதரின் அருளால் முகமென்ற வாய் மூடி ஓதவும், உஜுது னடை பழகி, வாசி எனும் குதிரை ஏறி, ஓர் நொடிக்கு ஓரண்டம் பாயவும் ஒழுக்கம் மிக அவசியம். பெரியோர்கள் அருளிய படினிலைகளே, நால்வகை ஒழுக்கம், நான்கு புருஷார்த்தங்கள், அஷ்டாங்க யோகம் முதலியன. ஓதாமல் ஓதி இருவாலும் ஒருசுழியான சின்முத்திரை கண்டு ஏற ஏற, இருள்மனம் அறிவாக மாறி ஒளி பிரகாசிக்கும். அறிவுக்கண் கொண்டு மூலத்து அடியில் பெருவான்கடை கண்டு, மூக்களவே மூச்சோடும் னிலையே னித்திய மோனமாகும். னீதி எனும் பொருளான மனு, கருப்பில் வெள்ளையின் ரகசியத்தை குருவருளால் தலைநாளில் அறிந்து, காலமற்ற இடத்தில் குடியேறி வாழ்வதே மெய்வாழ்வு. கவனம் அகமுகமாகப் பாய்ந்து தத்துவங்கள் அறுந்து, சிதைவிலா மனச் செல்வராக வாழ்பவர்க்கே மோட்ச சாம்ராஜ்யம் கைவரவாகும் என்ற குருபிரான் அருளுரையுடன், பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai                                    May 2024

## 28-04-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள ஞான அகவல் திருப்பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி அன்னலட்சுமி:* அண்டத்திற்கு இசைந்ததே பிண்டம். செல்வத்துள் செல்வமாகிய செவி கேட்க, தோய படித்து, உணர்ந்து, அறிய வேண்டியதே வேதம். தலையும் வாலுமாக எழுதாத எழுத்தாக இருப்பதே விந்து-னாதம். பாலில் உள்ள நெய் போல் சப்த சாயலாக தன்னுள் இருக்கும் இறைவனை சிவ ஒளியாக அறிய வைப்பதே செவியில் சுவை ஊட்டும் மெய்ப்பாலாகிய குருவின் நாதம்.

*ஜீவசகோதரி அஞ்சனா:* சுயம் பிரகாச பிரம்மப் பொருளை அருள்பவரே உலகளந்த பெருமாளாம் ஆசான். அவாவுடன் தாவி அலைந்து மனமாகும் நம் ஜீவனை மீண்டும் அகமுகமாகத் திருப்பி, உள்ளும் புறமுமான பிரபஞ்ச ஆற்றலை தன்னில் உணர்ந்து முத்தியடைய செய்பவரும் அவரே.

*ஜீவசகோதரி வாசுகி:* ஜீவனை சிவமாக்கும் அஷ்டாங்க யோகத்தை ஆசான் அருளால் அறிந்து தன்னுள் விளங்கும் சுயம் பிரகாசப் பொருளை அறிவதே தன்னை அறிதல். பிறவிப் பிணி தீர்க்கும் குருவின் திருவடி பற்றிட நல்லறமாம் இல்லறத்தை அடையலாம்.

*ஜீவசகோதரி தீபா:* அறியாமைக்குள் இருக்கும் அறிவு புலன்வழி பற்றி வீணாகி மனமாக அலைந்ததை ஒரு மெய்க்குருவின் அருளால் அகநோக்காக திருப்பி அறிவாக மாற்றும் செயலே சாகாக்கல்வி.

*ஜீவசகோதரி நந்தினி:* அவரவரின் ஜீவன் நஷ்டம் அடையாமல் பாதுகாக்கும் செயலே ஜீவகாருண்யம் என உணர்த்துவதே **ஆதி மார்க்க னீதி அவை.** இறைவனை தன்னுள் அறிந்து வழிபடுவதே அசலான மெய் வணக்கம். குருபிரானின் கருணையால் இறைவனை தன்னுள் அறிந்து வழிபடும் அசலான மெய் வணக்கமே பிறவாமைக்கான வழி.

*ஜீவசகோதரி செல்வி:* மனதை அறிவாக மாற்றுவதே, முயற்சி திருவினையாக்கும் செயல். குருவின் ஒரு மொழி கீதையே நம் அகந்தைக் கிழங்கை அறுத்தெடுத்து சுகந்தமாகிய செம்பொருளைக் காட்டி அழிவிலிருந்து மீட்கும்.

*ஜீவசகோதரி லோகநாயகி:* குருவின் திருமுகத்தில் மறுபிறப்பு பெற்ற மனிதனுக்கே தெய்வம் என்பது நிஜம். குருவருளால் ஆறாவது அறிவை அறிந்து இருதயத்தில் இருக்கும் ஈசனை வணங்குவதே மெய் வணக்கம். ஈசனின் இருப்பிடமாகிய கைலாயம் புகும் உபாயம் சொல்பவரே தாயாக தந்தையாக குருவாக விளங்கும் பரமாத்மா.

*ஜீவசகோதரி கவி:* ஆசானின் வாய்மையில் ஆழ்ந்து சிவமாகும் செயலே நமசிவாய வா(ஆ)ழ்க என்பதாக, மலர்மிசை ஏகும் செயலாக, வாழ்நாள் வீணாகாமல் வாழும் செயலாக உள்ளது. வினையால் உண்டான தேகம் பேதமாகவும், ஐம்புல நுகர்வில் சமமாக இருக்கும் ஜீவன் பேதமற்றும் உள்ளது. சிவபுரத்தில் உள்ள சுத்த சைதன்ய நாதரின் சொல் ஒரு பொருளே நமது மெய்ப்பொருள் அறிய வைத்து சிவனடி சேர்க்கும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அகமியத்தில் இருக்கும் அசலை அறிய வைக்கும் நகல் வடிவே ஆகம விதிப்படி அமைந்த கோயில்கள். ஆசான் அருளால் அழிந்திடா சூக்குமத்துள் அடங்கி அழிவிலா நித்திய வாழ்வு பெற வந்தவனே மனிதன். பேரறிவு பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ வழி அருள்வதே ஆதி மார்க்க னீதி அவை என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**07-04-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **அழியாப் பதி குடியேறிய...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. **ஓதி உணர்ந்து உரைப்படி...** என்ற ஞான அகவல் பாடல் வஸந்தமுகாரி ராகத்திலும் முத்திரையடி பாசுரமான **மெய்யென் றெவர்களும் வாய்புலம் புவதலா லறியார்...** என்ற பாடல் மோஹன ராகத்திலும், கேதாரகௌளை ராகத்திலும் குருபிரான் வழிகாட்டுதலுடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்று ஸ்தோத்திரப் பாடலுன் அவை இனிதே நிறைவானது.

## குரு வா ஆழ்க! குருவே துணை!

*பார்வதி! அபூர்வமும், அபரமும், னித்தியமும், சுயஞ்ஜோதியும், னிராமயமும், விரஜமும், பரமாகாயமும், துருவமும், ஆனந்நமும், அவ்வியமும், அகோசரமும், அப்படியே அகமியமும் (அறியப்படாததும்) னாமரூபங்ங ளின்றியதும், ஓசை ஒலியற்றதுமாகிய பிரம்மம் சுபாவமாக அதாவது உள்ளது உள்ளபடி அறியப்படுகின்றது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் 2024 – ஏப்ரல் மாதம் னிகழ்வுகள்

**13-04-2024 – சனிக்கிழமை:** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக உடுமலைப்பேட்டை ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி இல்லத்தில் புதிய அங்ஙத்தினர் சேர்க்கை நடைபெற்றது.





**14-04-2024 – ஞாயிற்றுக்கிழமை:** தமிழ் வருடம் குரோதி ஆண்டு பிறப்பு அன்று, குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள், ஆதி மார்க்க னீதி அவை அங்கத்தினர் மற்றும் எதார்த்த நன்மனத்தினர் ஆகியோருடன் காந்தலூர் (கேரளா) விஜயம் செய்தார்கள்.





Copyright © AMNA Trust, Chennai

**21-04-2024 – ஞாயிற்றுக்கிழமை:** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் **கணேஷ் கிருஷ்ணன் - அன்னபூரணி** இவர்களின் திருமண வைபவம் சென்னை வில்லிவாக்கத்தில் நடைபெற்றது.




**29.04.2024 / 30.04.2024 – திங்கட்கிழமை / செவ்வாய்க்கிழமை:** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள், ஆதி மார்க்க னீதி அவை அங்கத்தினர்களுடன் இராமேஸ்வரம் - இராமநாத சுவாமி கோவில், பதஞ்சலி முனிவர் சன்னதி, திருப்புல்லானி - ஆதி ஜெகநாத பெருமாள் கோவில், உத்திர கோச மங்கை - மங்கள நாத சுவாமி கோவில், வைப்பாறு (தூத்துக்குடி) செய்யது சம்சுதீன் தர்கா ஆகிய இடங்களுக்கு ஷேத்ராடனம் செய்தார்கள்.











Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **17-06-2024 - திங்கட்கிழமை / சிவகாசி** | குருபிரான் சாலை ரவி அப்பா ஆசீர்பாதத்துடன், ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர், ஜீவதம்பதியர் பழனிசெல்வராஜ் - அன்னலட்சுமி அவர்களின் புதல்வி. பொன்பிரியா - கோகுல்ராமன் இவர்களின் திருமண வைபவம் சிவகாசியில் நடைபெற உள்ளது. |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 ஏப்ரல் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 31**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு**: இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 34 – Month: May 2024*